## முதல்வர் மு.க.ஸ்டாலினின் கோரிக்கையை ஏற்று 2–ஆம் கட்ட சென்னை

# மெட்ரோ ரயில் திட்டத்திற்கு 7,425 கோடி ரூபாய் ஒதுக்கீடு!

## ஒன்றிய அமைச்சரவை ஒப்புதல்!

புதுடெல்லி, அக். 5 -

**சென்னையில் 63 ஆயிரத்து 246 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான மெட்ரோ ரயில் 2ம் கட்ட திட்டப்பணிகளுக்கு, 7 ஆயிரத்து 425 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்ய ஒன்றிய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பிரதமர் மோடியை சந்தித்து நேரில் வலியுறுத்திய நிலையில், தொடர் முயற்சிக்கு மாபெரும் வெற்றி கிடைத்துள்ளது. இதற்காக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பக்கத்தில் நன்றி தெரிவித்துள்ளார்.**

சென்னையில் 2-ம் கட்ட மெட்ரோ ரயில் திட்டப்பணிகள் 63ஆயிரத்து246 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 118.9 கிலோ மீட்டர் தொலைவுக்கு மூன்று வழித்தடங்களில் அமைக்கப்பட உள்ளது. இந்தத் திட்டத்தில், மாதவரம் - சிறுசேரி சிப்காட் வரை 45.8 கிலோ மீட்டர் தொலைவுக்கும், கலங்கரை விளக்கம் - பூவிருந்தவல்லி வரை 26.1 கிலோ மீட்டர் தொலைவுக்கும், மாதவரம் - சோழிங்கநல்லூர் வரை 47 கிலோ மீட்டர் தொலைவுக்கும் மூன்று வழித்தடங்களில் மெட்ரோ ரயில் திட்டப் பணிகள் நடைபெறுகின்றன.

இந்த திட்டத்திற்கு ஒன்றிய அரசு நிதி ஒதுக்கீடு செய்யாமல் இழுத்தடித்து வந்தது. இதையடுத்து, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஒவ்வொரு முறை பிரதமர் மோடியை சந்திக்கும்போதும், 2ம் கட்ட மெட்ரோ ரயில் திட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும் என வலியுறுத்தி வந்தார். ஆனால், தமிழ்நாட்டின் கோரிக்கையை ஏற்காமல் ஒன்றிய அரசு தொடர்ந்து மறுத்து வந்தது. ஒன்றிய நிதிநிலை அறிக்கையிலும் மெட்ரோ 2திட்டத்திற்கு நிதி ஒதுக்கப்படவில்லை. இதையடுத்து, கடந்த 27ஆம்



தேதி டெல்லி சென்ற முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், பிரதமர் மோடியை சந்தித்து, சென்னை மெட்ரோ ரயில் 2ஆம் கட்ட திட்டத்திற்கு ஒன்றிய அரசு நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும் என நேரில் வலியுறுத்திருந்தார்.

இந்நிலையில், முதலமைச்சர் மு.க.ஸ்டாலினின் தொடர் வலியுறுத்தல் காரணமாக, சென்னையில் 63 ஆயிரத்து246 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான மெட்ரோ ரயில் 2ம் கட்ட திட்டப்பணிகளுக்கு ஒன்றிய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. ஒன்றிய அரசு மற்றும் மாநில அரசின் நிதி பங்களிப்பு அடிப்படையில் இந்த திட்டத்தை செயல்படுத்த ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதாக, ஒன்றிய அமைச்சரவைக் கூட்டத்திற்குப் பின் அமைச்சர் அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

இதன்படி, தமிழ்நாடு அரசு 22ஆயிரத்து 228 கோடி ரூபாயும், ஒன்றிய அரசின் பங்காக 7ஆயிரத்து 425 கோடி ரூபாயும் இந்த திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்யப்படுகிறது. எஞ்சிய 33 ஆயிரத்து 593 கோடி ரூபாய் கடன்தொகையாக பெறப்பட உள்ளது. இதன் மூலம், சென்னை மெட்ரோ ரயில் 2ம் கட்ட திட்டத்துக்கு ஒன்றிய அரசின் நிதியை பெறும் தொடர் முயற்சியில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அரசுக்கு மாபெரும் வெற்றி கிடைத்துள்ளது என்றே குறிப்பிடலாம்.

**முதல்வர் மு.க.ஸ்டாலின் நன்றி!**

இதற்கிடையே, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பிரதமருக்கு நன்றி தெரிவித்து பதிவிட்டுள்ளார்.

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு: -**

**கடந்த சந்திப்பில் நான் முன்வைத்த கோரிக்கையை ஏற்றுக்கொண்டு, சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் இரண்டாம் கட்டப் பணிகளுக்கு ஒப்புதல் அளித்தமைக்காக பிரதமர் நரேந்திர மோடி அவர்களுக்கு நன்றி!**

**தமிழ்நாட்டு மக்களின் நெடுநாள் கோரிக்கை ஏற்கப்பட்டிருக்கும் நிலையில், சென்னை மெட்ரோ இரயிலின் இரண்டாம் கட்டத்தைக் கூடிய விரைவில் நிறைவேற்றுவோம் என உறுதியாக நம்புகிறோம்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

**பொருளாதார வளர்ச்சிக்கு உதவும் - பிரதமர்!**

இதற்கிடையே, சென்னை மெட்ரோ இரண்டாம் கட்ட திட்டத்திற்கு ஒன்றிய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ள நிலையில், சென்னை மற்றும் தமிழ்நாட்டு



மக்களுக்கு பிரதமர் மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார். மெட்ரோ திட்டம் போக்குவரத்தை எளிதாக்கவும், பொருளாதார வளர்ச்சிக்கும் உதவும் என்றும் பிரதமர் மோடி தெரிவித்துள்ளார். பரபரப்பான நகரத்தில் மக்களின் போக்குவரத்தை எளிதாக்க மெட்ரோ ரயில் இரண்டாம் கட்ட திட்டம் உதவும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

---

### 2024ஆம் ஆண்டிற்கான ‘தேசிய ஆசிரியர் விருது’ பெற்ற

## ஆசிரியர்கள் - முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் வாழ்த்துப் பெற்றார்கள்!

### பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி உடனிருந்தார்!

சென்னை, அக். 5 –

2024 ஆம் ஆண்டிற்கான தேசிய ஆசிரியர் விருது பெற்ற ஆசிரியர்கள் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களைச் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்.

**ஆசிரியராகத் தன்னுடைய வாழ்வைத் தொடங்கி இந்தியக் குடியரசுத் தலைவராக உயர்ந்த தத்துவ மேதை டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன் அவர்களின் பிறந்த நாளான செப்டம்பர் 5ஆம் நாள் ஆசிரியர் தினமாக கொண்டாடப்பட்டு வருகிறது. அந்நன்னாளில் தேசிய அளவில் சிறந்த ஆசிரியர்களாக தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்களுக்கு “தேசிய ஆசிரியர் விருது” ஒன்றிய அரசால் வழங்கப்பட்டு வருகின்றது.**

2024ஆம் ஆண்டிற்கான தேசிய ஆசிரியர் விருதிற்கு 38 மாவட்டங்களைச் சார்ந்த 102 ஆசிரியர்கள் இணைய வழியில் விண்ணப்பித்திருந்தனர்.

இவர்களில் பொம்மைகளை பயன்படுத்தி கற்பித்தல் உள்ளிட்ட பணிகளுக்காக வேலூர் மாவட்டம், இராஜகுப்பம், ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி இடைநிலை ஆசிரியர் இரா.கோபிநாத் மற்றும் மாணவர்களுக்கு மனநல ஆலோசனை வழங்குதல் மற்றும் தொழிற்கல்வி கற்பித்தலில் கணினி தொழில்நுட்பம் பயன்பாடு உள்ளிட்ட பணிகளுக்காக மதுரை, இலட்சுமிபுரம், டி.வி.எஸ். மேல் நிலைப் பள்ளியின் (அடிப்படை தானியங்கி ஊர்திப் பொறியியல் Basic Auto Mobile Engineering) மேல்நிலை தொழிற்கல்வி ஆசிரியர் நிலை1 இரா.சே.முரளிதரன் ஆகிய இரண்டு ஆசிரியர்களும் தெரிவு செய்யப்பட்டு, இந்திய குடியரசுத் தலைவர் அவர்களால் கடந்த செப்டம்பர் 5ஆம் நாளன்று புதுடெல்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் “தேசிய நல்லாசிரியர் விருது” வழங்கப்பட்டது.

“தேசிய நல்லாசிரியர் விருது” பெற்ற ஆசிரியர்கள் இரா. கோபிநாத் மற்றும் இரா.சே.முரளிதரன் ஆகியோர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (4.10.2024) தலைமைச் செயலகத்தில் சந்தித்து, விருதுகளை காண்பித்து வாழ்த்துப் பெற்றனர்.

இந்த நிகழ்வின்போது, பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், பள்ளிக்கல்வித் துறை செயலாளர் திருமதி. எஸ். மதுமதி, பள்ளிக்கல்வி இயக்குநர் முனைவர் ச.கண்ணப்பன் ஆகியோர் உடனிருந்தனர்.

---

### தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணி

## விருதுநகர் தெற்கு மாவட்ட துணை அமைப்பாளர் நியமனம்!

### தி.மு.க.விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளர் தயாநிதிமாறன் எம்.பி. அறிவிப்பு

விருதுநகர் தெற்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளராக நியமிக்கப்பட்ட இரா. கோகுல் அவர்கள் சரிவர கழகப் பணியாற்றாத காரணத்தால், அவரை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்குப் பதிலாக, **பா. நல்ல செல்வமணி**, (125/2, ஆசிரியர் குடியிருப்பு, கே.ஆர். நகர், இராஜபாளையம் - 626108, விருதுநகர் மாவட்டம்.) அவர்கள் விருதுநகர் தெற்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணியின் துணை அமைப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே அறிவிக்கப்பட்ட மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணியின் நிர்வாகிகளுடன் இவர் இணைந்து பணியாற்றுவார்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 03-10-2024.

**தயாநிதி மாறன், எம்.பி.,**
செயலாளர்,
தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணி

---



கழகத் தலைவர் – முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி, 2026 சட்டமன்றத் தேர்தல் ஒருங்கிணைப்புக்குழு சார்பில், கழக விளையாட்டு மேம்பாட்டு அணியின் செயல்பாடுகள் குறித்து ஆய்வுக் கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் விளையாட்டு மேம்பாட்டு அணி தொடங்கப்பட்டது முதல், அந்த அணி சார்பில் நடத்தப்பட்ட நிகழ்ச்சிகள், இளைஞர்கள் விளையாட்டில் ஆர்வமிக்கவர்களை கழகத்தின் ஆதரவாளர்களாக்க மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னெடுப்புகள் குறித்து கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் உறுப்பினர்கள் – அமைச்சர்கள் கே.என்.நேரு, எ.வ.வேலு, கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, அமைச்சர் தங்கம் தென்னரசு, விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளர் தயாநிதிமாறன் எம்.பி. உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



கழகத் தலைவர் – முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உருவாக்கிய, சட்டமன்றத் தேர்தலுக்கான கழக தேர்தல் ஒருங்கிணைப்புக்குழுவின் ஆலோசனைக் கூட்டத்தை அண்ணா அறிவாலயம் – கலைஞர் அரங்கில் நேற்று முன்தினம் கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆலோசனை நடத்தினார். இந்தக் கூட்டத்தில் பங்கேற்ற கழக தகவல் தொழில் நுட்ப நிர்வாகிகளின் பணிகளை, ஒருங்கிணைப்புக் குழுவின் உறுப்பினர்களுடன் இணைந்து ஆய்வு செய்தார். கடந்த 3 ஆண்டுகளில் ஐ.டி.விங் மேற்கொண்ட பணிகள் பற்றிய அறிக்கையை அளித்தார்கள். கழக அரசின் சாதனைகள் Social Mediaவில் கொண்டு சேர்க்கப்படும் விதம், கொள்கை எதிரிகளின் பொய்ப்புரட்டுகளுக்குப் பதிலடிக் கொடுப்பது உள்ளிட்டவை போன்ற அவர்களின் செயல்பாடுகளை ஆய்வு செய்து தேர்தலுக்கான திட்டங்களையும் கேட்டறிந்தார். 2026 சட்டமன்றத் தேர்தலில் கழகம் மாபெரும் வெற்றியைப்பெற சமூக வலைத்தளத்தில் சிறப்பாகச் செயல்பட வேண்டுமென ஆலோசனைகளை இக்குழு வழங்கியது. இதில் குழு உறுப்பினர்கள் அமைச்சர்கள் கே.என்.நேரு, எ.வ.வேலு, கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, அமைச்சர் தங்கம் தென்னரசு மற்றும் அணிச் செயலாளர் அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, கவிஞர் மனுஷ்யபுத்திரன், கோவி.லெனின் உள்ளிட்ட நிர்வாகிகள் பங்கேற்றனர்.



தி.மு.கழகத்தின் வெற்றி 2026லும் தொடர்வதை உறுதி செய்திட, கழகத் தலைவர் – தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், சட்டமன்றத் தேர்தல் ஒருங்கிணைப்புக்குழுவை அமைத்தார்கள். அந்தக்குழுவின் சார்பில், ஒவ்வொரு அணிகளின் பணிகளையும் தொடர்ந்து ஆய்வு செய்து வருகிறது. அதன் ஒரு பகுதியாகக் கழக சுற்றுச்சூழல் அணியின் நிர்வாகிகளின் பணிகளை நேற்று முன்தினம் அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கில் நடைபெற்றது. இதில் கழக சுற்றுச்சூழல் அணி சார்பில் களத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் குறித்து கழக இளைஞர் அணிச்செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின், குழு உறுப்பினர்கள் அமைச்சர்கள் கே.என்.நேரு, எ.வ.வேலு, கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, அமைச்சர் தங்கம் தென்னரசு ஆகியோர் கேட்டறிந்தனர். மேலும், சுற்றுச்சூழலைக் காப்பதற்காக, நம் திராவிட மாடல் அரசு முன்னெடுக்கும் திட்டங்களை அறிவுத்தளத்தில் மட்டுமன்றி அனைத்துத் தரப்பு பொதுமக்களிடமும் கொண்டு சேர்ப்பது பற்றி சுற்றுச்சூழல் அணியின் நிர்வாகிகள் விரிவாக எடுத்துக்கூறினர். 2026 தேர்தலுக்கானப் பணியைச் சுற்றுச்சூழல் அணியினர் சுற்றிச்சுழன்று மேற்கொள்ள வேண்டுமென ஆலோசனைகளை வழங்கப்பட்டது. இக்கூட்டத்தில் அணி ச் செயலாளர் கார்த்திகேய சிவசேனாதிபதி, பூங்கோதை ஆலடி அருணா உள்ளிட்ட நிர்வாகிகள் பங்கேற்றனர்.



சென்னை சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி தொகுதியைச் சேர்ந்த சென்னை மேற்கு மாவட்டக் கழக துணைச் செயலாளர் ஆர்.என். துரையின் தாயார் திருமதி ஆர்.கண்ணம்மாள் அவர்கள் மறைவெய்தினார். செய்தியறிந்து, கழக இளைஞரணிச் செயலாளர் – துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அன்னாரின் இல்லத்துக்குச் சென்று மறைந்த அன்னாரின் உடலுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். தாயாரை இழந்து வாடும் ஆர்.என்.துரை மற்றும் அவர்களுடைய குடும்பத்தார், நண்பர்களுக்கு ஆறுதலையும், இரங்கலையும் தெரிவித்தார்.